"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,152,82,90,000/–, மூலதனக் கணக்கில் ரூ.145,00,04,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.10,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17–7–2019), புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8–44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனையதாள்கள்

169. மானியக் கோரிக்கை எண் 19 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2019–2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

170. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2018–2019. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

171. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2019–2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2019 ஜூலை 16]

172. மானியக் கோரிக்கை எண் 25—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2019—2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

173. மானியக் கோரிக்கை எண் 48—போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2019—2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

174. "நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் சாதனைகள்" என்கிற சிறுநூல் (தமிழ்)

175. "பொதுப் பணித் (கட்டடங்கள்) துறையின் சாதனைகள்" என்கிற சிறுநூல் (தமிழ்)

176. "நீர் வள ஆதாரத் துறையின் சாதனைகள்" என்கிற சிறுநூல் (தமிழ்)

177. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2019—2020. (தமிழ்)

178. கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) மற்றும் பாசனம் (பொதுப் பணித் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2019—2020. (தமிழ்)

179. சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோரால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2019—2020. (தமிழ்)

180. இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2019—2020. (தமிழ்)